செ.இ.எண்: 270

நாள்: 23/12/11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 23.12. 2011

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், கிருஷ்ணன் கோயில் – மதுரை நெடுஞ்சாலையில், **22.12.2011** அன்று கடலூர் மாவட்டம், வடலூர் கிராமத்தைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் பயணம் செய்த வேன் மீது பெங்களூரிலிருந்து செங்கோட்டைக்கு சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதால், அவ்வேனின் ஓட்டுநர் திரு. பிரகாஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த பிரகாஷின் குடும்பத்ினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் ஐந்து பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், விருதுநகர் மற்றும் மதுரை மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் காலமான திரு. பிரகாஷ் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா **25,000/-** ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா **10,000/-** ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.